

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 18ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் புதன்கிழமை**

**அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம் - குறள் எண் : 58**

**குறள்**

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

**குறள் விளக்கம்**

நற்பண்பு பெற்றவனைக் கணவனாகப் பெற்றால், பெண்டிர்க்கு இல்வாழ்க்கையெனும் புதிய உலகம் பெருஞ் சிறப்பாக அமையும்.

பழமொழி ( Proverb )

***A sound mind in a sound body***

உடல் வலுவுற்றால் உள்ளமும் வலுவுறும்.

பொன்மொழி

கடந்து போன நிமிடத்தை விலைக்கு வாங்கி அனுபவிக்க முடிகிற அளவுக்கு இந்த உலகில் யாரும் பணக்காரர்கள் கிடையாது. .

இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

இன்றைய பொது அறிவு வினா விடை

1. ஜிப்பை கண்டுபிடித்தவர்? ஜே.ஜட்சன்
2. அணுக்கரு இயற்பியலின் தந்தை என்றழைக்கப்படுபவர்? எர்னஸ்ட் ரூதர்போர்டு

தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Who would like to read? யார் வாசிக்க விரும்புகிறீர்கள் ?

Take a worksheet. பயிற்சித் தாளை எடுத்துக் கொள்.



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- இந்திய சுதந்திர போராட்ட வீராங்கனை சரோஜினி நாயுடு இறந்த தினம்(1949)
- யாஹூ நிறுவனம் தொடங்கப்பட்டது(1995)
- மொராக்கோ பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது(1956)
- டெக்சாஸ், குடியரசு மெக்சிக்கோவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது(1836)
- மகாத்மா காந்தி தண்டி யாத்திரை துவக்கினார்(1930)

### இன்றைய செய்திகள்

- உக்ரைன் யுத்தத்தில் இந்திய மாணவர் பலி.
- கீவ் நகரத்தில் உலகின் 2-வது உயரமான டிவி கோபுரம் மீது ரஷ்யா தாக்குதல்
- உக்ரைனில் இருந்து ரஷ்யா வெளியேற ஐ.நா. உத்தரவு.
- உக்ரைனிலிருந்து இந்திய மாணவர்களை அழைத்து வர 26 விமானங்கள் இயக்கபடுவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.
- உக்ரைன் மீதான போருக்கு சீனா வருத்தத்தை தெரிவித்துள்ளது.
- இந்தியர்களை மீட்க ஐரோப்பிய யூனியன் உதவுவதாக அறிவிப்பு
- உலக தடகள போட்டிகளில் ரஷ்ய வீரர்கள் விளையாட தடை
- உக்ரைனிலிருந்பு 60 சதவீத இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவுச் செயலர் தெரிவிததுள்ளார்.
- நாடு முழுதும் உள்ள கோவில்களில் நேற்று இரவு முழுதும் மஹா சிவராத்திரி பூஜை நடைபெற்றது.